DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No. 218/2019**

Deposition of Witness : PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. அழகுமுருகன் | Father's Name | : | பெருமாள் |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 01.03.2022.

---

<u>முதல் விசாரணை</u>–

நான் இம்மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தினை சத்திய பிரமாண நிரூபண வாக்குமூலமாக ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பு சான்றாவணங்களை தாக்கல் செய்கிறேன். பழனிசெட்டிபட்டி காவல்நிலைய குற்ற எண்.402/2018–ல் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வலைதள பதிவிறக்க நகல் ம.சா.ஆ.1. மேற்சொன்ன முதல் தகவல் அறிக்கையில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் வலைதள பதிவிறக்க நகல் ம.சா.ஆ.2. மேற்சொன்ன முதல் தகவல் அறிக்கையின் பேரில் நடைபெற்ற விசாரணையின் பேரில் விசாரணை அதிகாரி தயார் செய்த மாதிரி வரைபடத்தின் வலைதள பதிவிறக்க நகல் ம.சா.ஆ.3. வேலம்மாள் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் எனக்கு வழங்கப்பட்ட காயச்சான்றிதழின் வலைதள பதிவிறக்க நகல் ம.சா.ஆ.4. TN 60 AY 8733 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர மோட்டார்

வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் வலைதள பதிவிறக்க நகல் ம.சா.ஆ.5. TN 58 BZ 1033 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர மோட்டார் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் வலைதள பதிவிறக்க நகல் ம.சா.ஆ.6. வேலம்மாள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட மருத்துவ விடுவிப்பு அறிக்கையின் ஒளிநகல் ம.சா.ஆ.7.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by me and read over to the
witness and admitted by him/her to be correct.
(Sd.) N.Sundaram,
Chief Judicial Magistrate,
Theni.